**O.S. No. 16/2025** **நாள்: 17.06.2026**

நீலகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு ஜுன் மாதத்தில் 17–ம் நாள் **வாதி நந்தினி PW–1** என்பவரின் சாட்சியம் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி. ராமலட்சுமி, நிலை எழுத்தர்–3 என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **நந்தினி** | தொழில் | : |
| தந்தை/கணவர் பெயர் | : கணேசன்/மணிகண்டன் | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : 25 |
| தாலூக்கா | : | சாதி | : |

---

<u>**வாதி முதல் விசாரணை :**</u>

நான் இந்த வழக்கில் **வாதி** ஆவேன். இன்று, நான் முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளைப் படித்து கேட்டு தெரிந்து கொண்டேன். அவைகள் யாவும் சரியானவை என்று நான் உறுதி கூறுகிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. வாதியின் ஆதார் அடையாள அட்டை ஒளி அசலுடன் ஒப்பிட்டு பார்த்து **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. ரஞ்சித் கணேஷ் என்பவரது ஆதார் அடையாள அட்டை ஒளி நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்த்து **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. கணேஷ் என்பவரது ஆதார் அடையாள அட்டை ஒளி நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்த்து **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. கணேஷ் என்பவரது குடும்ப அட்டையின் ஒளி நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்த்து **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 07.12.2023 தேதியிட்ட ரஞ்சித் என்பவரது இறப்பு சான்றிதழ் இணையவழி சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 09.05.2023 தேதியிட்ட கணேஷ் என்பவரது இறப்பு சான்றிதழ் இணையவழி சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 15.04.2023 தேதியிட்ட ஊட்டி டவுன் சென்ட்ரல் காவல் நிலைய குற்ற எண். 182/2023–ன் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் சார்வு செய்யப்பபட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 08.04.2024 தேதியிட்ட மாண்பமை மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம் M.C.O.P. No. 27/2023–ல் பிறப்பித்த உத்தரவின் இணையவழி நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 08.12.2023 தேதியிட்ட கணேஷ் என்பவரது வாரிசு சான்றிதழ் இணையவழி சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.06.17 18:51:40 +0530